# மெட்ரோ டாக்சி, சீருந்தில் 53 ஆயிரம் பேர் பயணம்

**சென்னை, நவ. 14–**

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து இயக்கப்படும், ஷேர் ஆட்டோ, டாக்சி, சீருந்தில், 53 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில்களில், பயணியர் வருகையை அதிகரிக்க, நிலையங்களில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயிலில் வரும் பயணியர், நிலையத்தில் இருந்து பிற இடங்களுக்கு செல்வதற்கு, குறைந்த கட்டணத்தில் சென்று வர ஏதுவாக, கிண்டி உட்பட, ஏழு நிலையங்களில், ஷேர் ஆட்டோ வசதி செய்யப்பட்டுள்ளது.

இத்துடன், டி.எம்.எஸ்., உட்பட, ஐந்து நிலையங்களில், ஷேர் டாக்சி வசதியும், 16 நிலையங்களில் சீருந்து வசதியும் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம், அக்டோபர் மாதத்தில், 53 ஆயிரத்து, 586 பேர் பயணம் செய்துள்ளனர்.

இவ்வசதிகள் துவங்கப்பட்டதில் இருந்து, அக்டோபர் மாதம் வரை, 5.88 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.